# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (23.07.2022 முதல் 27.07.2022 )

**அறிக்கை எண் 058/2022** **தேதி.22.072022**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30$^{\circ}$செ முதல் 37$^{\circ}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24$^{\circ}$செ முதல் 28$^{\circ}$செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15$^{\circ}$செ முதல் 19$^{\circ}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10$^{\circ}$செ முதல் 12$^{\circ}$செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (17.06.2022 முதல் 21.07.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 27.07.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17/07 | 18/07 | 19/07 | 20/07 | 21/07 | தேதி | நாள் -1 23/07 | நாள்-2 24/07 | நாள்-3 25/07 | நாள்-4 26/07 | நாள்-5 27/07 |
| 1.3 | 3.1 | 0.8 | 1 | 0.4 | மழை (மி.மீ) | 14 | 4 | 4 | 3 | 6 |
| 30 | 31 | 29 | 31 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 36 | 36 | 35 | 35 |
| 22 | 23 | 22 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 20 | 20 | 21 | 21 | 21 |
| 7 | 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 87 | 88 | 91 | 91 | 90 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 87 | 91 | 74 | 80 | 69 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 20 | 12 | 19 | 14 | 15 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 7 | 6 | 8 | 5 | 6 |
| 200 | 230 | 230 | 200 | 200 | காற்றுவீசும் திசை | 260 | 260 | 270 | 270 | 270 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (23.072022 முதல் 27.072022)

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 37°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 20°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக

வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 5-8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை எதிர் பார்க்கப்படுபிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.<br>மேற்கு தொடர்ச்சி மழையடிவார'களில் அதிக மழைக்கு வாய்ப்புள்ளதால் சரிவுக்கு குறுக்காக வடிகால் வசதி ஏற்படுத்தி மண் அரிப்பினை தடுக்கவேண்டும். |
| நெல் | நடவு | தூர் பிடிக்கும் தருணத்தில் உள்ள கார் பருவ நெல்லில் ஒரு எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து மற்றும் 10 கிலோ சாம்பல் சத்து இடவும். அதன் பிறகு தண்ணீரை வடிக்க வேண்டாம்.<br>தற்போது நிலவும் வானிலை காரணமாக கார் பருவ நெற்பயிரில் பச்சை தத்து பூச்சியின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கண்காணித்து ஒரு எக்டருக்கு பென்தையான் 500 மில்லி தெளிக்க வேண்டும். |
| மக்காச்சோளம் | வளர்பருவம் | நடவு செய்து 30 நாட்களான இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 55கிலோ யூரியா மற்றும் 12கிலோ பொட்டாஷை களை எடுத்த பின்பு மேலுரமாக இடவும். |
| நிலக்கடலை | வளர்பருவம் | தற்போது நிலவும் வானிலையால் மானாவாரி நிலக்கடலையில் செர்கொஸ்போரா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணிக்கவும். நோய் ஏற்கனவே தாக்கி இருந்தால் மேங்கோசெப் என்ற பூஞ்காணக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் வீதம் கலந்து தெளிக்கவும். |
| கரும்பு | வளர்பருவம் | கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பின்பருவ கரும்பிற்கு மேலுரமாக 90 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்த தழைச்சத்து மற்றும் 37 கிலோ சாம்பல் சத்து உரங்களை இட வேண்டும். |
| தக்காளி | நாற்றாங்கால் | 18 நாட்களுக்கு மேலான தக்காளி நாற்றாங்காலுக்கு நீரில் கரையக்கூடிய 19:19:19 உரத்தினை 5கிராம்/1லிட்டர் என்ற விகிதத்தில் கலந்து வேரில் ஊற்றவும். இதன் மூலம் தரமான நாற்றுக்களை பெறலாம். |
| கொடி வகை காய்கறிகள் | விதைப்பு | ஜீலை 15 – 30 ம் தேதி வரை கொடி வகை காய்களை விதைப்பதற்கு ஏற்ற தருணம். எனவே பெறப்படும் மழையைப் பயன்படுத்தி குழிகளில் விதைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தற்போது நிலவும் அதிக ஈரப்பதத்துடன் கூடிய மேகமூட்டமான வானிலை பீர்க்கங்காயில் பச்சை தத்துப்பூச்சியை அதிகப்படுத்தும் இதை 3 சதவீத கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை வடிகரைசலைத் தெளிக்கவேண்டும். |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | விதைப்பு | அதிக காற்றின் வேகம், காற்றின் ஈரப்பதம் மற்றும் மேகமூட்டம் நிலவ வாய்ப்புள்ளதால் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் கண்காணிக்க வேண்டும்.<br>மஞ்சளில் நுண்ணுட்டசத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய 375 கிராம் பெரஸ்சல்பேட், துத்தநாக சல்பேட் மற்றும் போராக்ஸினை 250 லிட்டர் தண்ணீரில் கலந்து மழையில்லாத தருனங்களில் தெளிக்க வேண்டும். |
| கறிவேப்பிலை | | நிலவும் வானிலையால் கறிவேப்பிலையில் இலைப்புள்ளி நோய் தென்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த ஒரு கிராம் கார்பன்டசிம்மை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும்.<br>தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும்.<br>தென்னை மரங்களில் நத்தைப்புழு தாக்குதல் அதிகமாக தென்படுவதால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2மிலி டைக்குளோர்வாஸ் 76 WSC மருந்தினை தெளிக்கவும் |
| கால்நடைகள் | | நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடி வீக்க நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கரக்கும் முன்னும் பின்னும் மடியை 1 சதம் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கலவையில் நன்கு கழுவ வேண்டும்.<br>பருவமழை ஆரம்பித்துவிட்டதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி மற்றும் நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசி போடவேண்டும். மேலும் குடற்புழு நீக்கம் செய்யவேண்டும். |

## குறுஞ்செய்தி

- பருவமழை ஆரம்பித்துவிட்டதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி மற்றும் நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசி போடவேண்டும்.

முதன்மைஅலுவலர் (GKMS)
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை